பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 07 2024 **SUNDAY** 6 45 **AM**

வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கடந்த நான்காண்டுகளில் மத்திய அரசு 8 கோடி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. கள்ளச்சாராய உயிரிழப்பு மற்றும் அரசியல் படுகொலை ஆகியவற்றால் திமுக அரசு, ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் கோபத்திற்கு ஆளாகியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
3. தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் பால் அனைத்தையும் ஆவின் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய ஆலோசிக்கப்பட்டு வருவதாக பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.
4. பத்திரப்பதிவு மூலம் தமிழக அரசு ஒரே நாளில் 224 கோடியே 26 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.
5. இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது மற்றும் கடைசி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று ஹராரேயில் நடைபெறவுள்ளது.

>>>><<<<

கடந்த நான்காண்டுகளில் மத்திய அரசு 8 கோடி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மும்பை, கோரேகான் புறநகரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் புதிய திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய அவர், வேலைவாய்ப்பு குறித்த சமீபத்திய இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையை சுட்டிக்காட்டினார்.

நாட்டில் வேலையின்மை நிலவுவதாக தவறான தகவல்களை பரப்பியவர்கள் தற்போது அமைதியாக இருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டிற்கு தற்போது திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மிகவும் அவசியம் என்றும், அதனை உருவாக்கும் வகையில் அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கும், வளர்ச்சிக்கும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முக்கியத்துவம் அளிப்பதாகவும், எனவே மூன்றாவது முறையாக பதவியேற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசை சிறு மற்றும் பெரிய முதலீட்டாளர்கள் வரவேற்பதாகவும் பிரதமர் பெருமிதத்துடன் கூறினார்.

மும்பையில் நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிரதமர், இந்திய பத்திரிகை சங்கத்தின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தும் அரசுக்கு ஆதரவாக ஊடகங்கள் செயல்பட வேண்டும் என்று அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசு மேற்கொண்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்முயற்சிகளை உலக நாடுகள் பாராட்டுவதாகவும், இதுபோன்ற முன்முயற்சிகளை மிகப் பெரிய இயக்கமாக மாற்ற ஊடகங்கள் அரசுக்கு உதவ வேண்டும் என்றார்

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் அரசின் முயற்சிகளுக்கு பக்கபலமாக ஊடகங்கள் திகழ வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவில் உள்ள பல்வேறு ஊடகங்கள், டிஜிட்டல் பதிப்பை கொண்டுள்ளதை சுட்டிக்காட்டிய திரு. நரேந்திர மோடி, சர்வதேச பிரச்சினைகளில் இந்தியாவின் நிலைப்பாட்டை தெரிவிக்க சர்வதேச மொழிகளிலும் பதிப்புகளை தொடங்க வேண்டும் என்று பத்திரிகை நிறுவனங்களை கேட்டுக் கொண்டார்..

>>>><<<<

உணவு பதப்படுத்துதல் தொழிலில் உள்ள ஏராளமான வாய்ப்புகளை இந்திய நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று உணவு பதனிடுதல் துறையின் எதிர்கால திட்டங்கள் குறித்து நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், புதுதில்லியில் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உணவு பதப்படுத்தும் தொழில் குறித்த சர்வதேச மாநாட்டில் பங்கேற்குமாறு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

உணவுத்துறையில் உலக அளவில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக உணவு ஒழுங்காற்று உச்சிமாநாட்டிலும் இந்திய நிறுவனங்கள் பங்கேற்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

கள்ளச்சாராய உயிரிழப்பு மற்றும் சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை ஆகியவற்றால் தமிழக அரசு, ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் கோபத்திற்கு ஆளாகியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளார்.

மாநிலத்தின் பல்வேறு இடங்களில் போதைப் பொருட்களின் புழக்கம் அதிகமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை சம்பவம், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மிகவும் மோசமான நிலையில் இருப்பதை எதிரொலிப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் பல்வேறு ஊராட்சிகளில் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்த தலைவர்கள் நாற்காலியில் கூட அமர முடியாத நிலை உள்ளதாகவும், இதுகுறித்து திமுகவின் கூட்டணி கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் பால் அனைத்தையும் ஆவின் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய ஆலோசிக்கப்பட்டு வருவதாக பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலத்தில் நாளொன்றுக்கு 2 கோடியே 25 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதாகவும், இதில் 40 சதவீதத்தை உற்பத்தியாளர்கள் தங்களது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டு எஞ்சிய பாலை மட்டுமே விற்பனைக்கு அனுப்புவதாக கூறினார்.

இதில், 36 லட்சம் லிட்டர் பால் மட்டுமே ஆவின் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்படுவதாகவும், மீதமுள்ள பாலை தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளிடமிருந்து அனைத்து பாலையும் ஆவின் நிறுவனமே கொள்முதல் செய்து, அதை தமிழகத்தின் தேவைக்குப் போக, மீதமுள்ளவற்றை வெளி மாநிலத்திற்கு அனுப்ப முடியுமா என்பது குறித்து ஆய்வு செய்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

பத்திரப்பதிவு மூலம் தமிழக அரசு ஒரே நாளில் 224 கோடியே 26 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

நேற்று முன்தினம் ஒரே நாளில், மாநிலத்தில் இதுவரை இல்லாத அளவாக 20 ஆயிரத்து 310 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>><<<<

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை, வெள்ளக்கல் இந்திராநகர் பகுதியில் டெங்கு காய்ச்சலுக்கு கட்டிடத் தொழிலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளதை அடுத்து அப்பகுதியில் சுகாதாரத்துறையினர் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பொதுமக்களுக்கு காய்ச்சல் பரிசோதனைகளை மேற்கொண்ட சுகாதாரத் துறையினர், அனைத்து வீடுகளிலும் மருந்துகளை தெளித்து சுற்றுப்புறத்தை சுகாதாரமாக வைத்திருக்க பொதுமக்களுக்கு அறிவுறுத்தினர்.

தேவையற்ற பொருட்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளுமாறும், பொதுமக்களை சுகாதாரத்துறையினர் கேட்டுக் கொண்டனர்.

>>>><<<<

சென்னை சென்ட்ரல் - கூடூர் ரயில் பாதையில் கொருக்குப்பேட்டை — பேசின் பிரிட்ஜ் இடையே ரயில் பாதை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவுள்ளதால், புறநகர் மின்சார ரயில் சேவையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கும்மிடிப்பூண்டியிலிருந்து இரவு 10..30 மணிக்கு புறப்படும் மின்சார ரயில் நாளை முதல் வரும் 17ஆம் தேதிவரை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குப் பதிலாக, கடற்கரை ரயில் நிலையத்திற்கு திருப்பி விடப்படுவதாகவும் தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதேபோல் சென்னை மூர்மார்க்கெட் வளாகத்திலிருந்து ஆவடிக்கு இரவு 11.40 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில், நாளை முதல் 3 நாட்களுக்கு கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து இரவு மணி 11.45-க்கு இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மேற்கு திசைக்காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

அமெரிக்காவில் பென்சில்வேனியா மாகாணத்தில் முன்னாள் அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதை அடுத்து ட்ரம்ப் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

>>>><<<<

ஜி-7 நாடுகளின் வர்த்தக அமைச்சகர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நாளை இத்தாலி புறப்பட்டுச் செல்கிறார்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் 200 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 2 பேர் உயிரிழந்தனர், 4 பேர் படுகாயமடைந்தனர்.

>>>><<<<

அஸ்ஸாம் மாநிலத்தில் மழை மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 91ஆக அதிகரித்துள்ளது.

>>>><<<<

சத்திஷ்கர் மாநிலத்தில் காவல்துறையினர் மீது தாக்குதல் நடத்தியதாக மாவோயிஸ்ட்கள் 4 பேர் மீது தேசிய புலனாய்வு முகமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் பொதுத்துறை பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கான பொதுவான விலைப்பட்டியலை சென்னையில் நேற்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ,வ. வேலு வெளியிடடார்.

>>>><<<<

திருவள்ளூர் மாவட்டம், ஊத்தக்கோட்டை அருகேயுள்ள மெய்யூர் ஊராட்சியில் மலைவாழ் மக்கள் 47 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாவட்ட வருவாய்த்துறையினர் வழங்கினர்.

>>>><<<<

நாகர்கோவிலிலிருந்து தாம்பரத்திற்கு இன்று மாலை மணி 4.35-க்கு புறப்பட வேண்டிய அதிவிரைவு ரயில் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது மற்றும் கடைசி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஹராரேயில் நடைபெறவுள்ள இப்போட்டி மாலை மணி 4.30-க்கு தொடங்குகிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வென்றது.

முதலில் விளையாடிய ஜிம்பாப்வே நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 152 ரன் எடுத்தது.

153 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 15 புள்ளி இரண்டு ஓவரில் விக்கெட் இழப்பின்றி 156 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

>>>><<<<

ஹங்கேரியில் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பியாட் செஸ் போட்டியில் இந்தியாவின் சார்பில் குகேஷ், பிரக்ஞானந்தா உள்ளிட்ட முன்னணி செஸ் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>END<<<<